

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான 146 நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, கள்ளக்குறிச்சி நகரில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தில் புதிய வீடு கட்ட ஆணை!

# “நான் முதல்வன்” பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிய முதல்வர்!

## சமூக வலைதளத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பதிவு!

சென்னை, செப். 28-

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு” விழாவில் “நான் முதல்வன்” திட்ட பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிடும் வகையில் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்ட ஆணை வழங்கியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஒழுகும் வீட்டில் அப்பா இருப்பாரே என்ற கவலை பிரேமாவுக்கு இனி வேண்டாம்!**

**எத்தனையோ பேரின் எதிர்ப்பையும் மீறி உங்களைப் படிக்க வைத்த தந்தையிடம், முதல் மாதச் சம்பளத்தைத் தந்து நீங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள்!**

**உங்கள் கனவை நிறைவேற்றிய தந்தைக்குக் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையை வழங்கி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு ‘எஸ்.வி.வெங்கடராமன் தெரு’ !

# நுங்கம்பாக்கம் கல்லூரிப் பாதைக்கு ‘ஜெய்சங்கர் சாலை’ - பெயர்ப் பலகைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 28-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு “ஜெய்சங்கர் சாலை” என்றும், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ்.வி. வெங்கடராமன் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு “எஸ்.வி. வெங்கடராமன் தெரு” என்றும், புதிய பெயர் சூட்டப்பட்ட சாலைகளின் பெயர் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

### ஜெய்சங்கர் சாலை

மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் 35 ஆண்டு காலத்திற்கு மேலாக தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய அவர் பல்வேறு தொண்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதோடு, கலைமாமணி விருது பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். அவரது கலைச்சேவையை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த நுங்கம்பாக்கத்திலுள்ள கல்லூரி பாதையை (College Lane) “ஜெய்சங்கர் சாலை” என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

### எஸ்.வி. வெங்கடராமன் தெரு

மயிலாப்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி. சேகர் தந்தை எஸ்.வி. வெங்கடராமன், விஜயா வாஹினி ஸ்டுடியோவில் லேப் உயரதிகாரியாக பணியாற்றினார். மேடை நாடகங்களில் பெண் வேடமிட்டு நடித்துள்ளதோடு, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரிகளில் தற்காலிக பேராசிரியாக பணியாற்றியுள்ளார். தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சித் தொடர் “வண்ணக்கோலங்கள்” தயாரிப்பாளர் ஆவார். அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த அவர் கண்தானம், ரத்த தானம், குழந்தைகளுக்கு ஏற்படும் சர்க்கரை குறைபாடு பற்றி விழிப்புணர்வு குறும்படத்தை தயாரித்ததோடு, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும் பெற்றுள்ளார். அவரது சேவையை சிறப்பிக்கும் வகையில், அவர் வசித்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு “எஸ்.வி. வெங்கடராமன் தெரு” என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், அரசு உயர் அலுவலர்கள், நடிகர் ஜெய்சங்கர் மற்றும் எஸ்.வி. சேகர் ஆகியோரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ். மதன் மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ மாபெரும் எழுச்சி கொண்டாட்டம்!

# அரியலூர் மருத்துவக் கல்லூரி அனிதா அரங்கத்தில் நேரலை ஒளிபரப்பு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர்,செப்.28–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ‘‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு”, தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் நிகழ்ச்சியில் தெலுங்கானா முதலமைச்சர் அ.ரேவந்த் ரெட்டி அவர்கள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் 2025– கல்வியாண்டிற்கான புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டார். அதனைத்தொடர்ந்து 2025–26 ஆம் கல்வியாண்டிற்கு புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளுக்கு வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார்.

இந்நேரலை ஒளிபரப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியை கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்னும் கருப்பொருளில் கொண்டாடும் விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேலும், கல்வி அனைத்துத் தரப்பினருக்கும் சென்று சேரவேண்டும் என்கிற நோக்கத்தோடு அரசுப்பள்ளியில் பயின்று கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் வாயிலாகவும், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் வாயிலாகவும் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் நடைபெற்ற தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியின் கொண்டாட்டம் நிகழ்ச்சியில் 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களையும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் துவக்கி வைத்தார்கள்.

அதன்படி அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் நடைபெற்ற இவ்விழாவின் நேரலை ஒளிப்பரப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 2025–26 ஆம் கல்வியாண்டிற்கான புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 803 முதலாமாண்டு கல்லூரி மாணவிகளுக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 1400 முதலாமாண்டு கல்லூரி மாணவர்களுக்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, வங்கிப் பற்று அட்டைகளை வழங்கினார்.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 1994 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 2072 மாணவர்களும் மாதந்தோறும் ரூ.1000 கிடைக்கப்பெற்று பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துக்கிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிமளம், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பிரேமி, மாவட்ட சமூக நல அலுவலர் விக்னேஷ்வரி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய பொறுப்பாளர் பொன்.செல்வம்,பொதுக்குழு உறுப்பினர் இரா. பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், வழக்கறிஞர் ஆ.கதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அருண், கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகள் மாற்றியமைக்கப்பட்டு, **திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு** என இரண்டுமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அம்மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்களும் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

| மாவட்டம் | மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகள் | மாவட்டப் பொறுப்பாளர்கள் |
|---|---|---|
| திருநெல்வேலி மேற்கு | அம்பாசமுத்திரம்<br>ஆலங்குளம் | இரா. ஆவுடையப்பன் |
| திருநெல்வேலி கிழக்கு | நாங்குநேரி, இராதாபுரம் | ம. கிரகாம்பெல் |

**‘அண்ணா அறிவாலயம்’**
சென்னை 18
நாள்: 26.09.2025

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் 38 நபர்களுக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 18 நபர்களுக்கும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் 6 நபர்களுக்கும், என மொத்தம் 62 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், த. மனோ தங்கராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## டாக்டர் எம்.ஜி.ஆர்.

# மருத்துவப் ‘பல்கலைக் கழக ஆராய்ச்சி நாள் - அறிவேள்வி 2025’

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – மருத்துவ மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிச் சிறப்பித்தார்!

சென்னை, செப். 28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வெள்ளி விழா கலையரங்கத்தில் **‘பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் - அறிவேள்வி 2025’** விழா, நேற்று முன்தினம் (26.09.2025) சிறப்புடன் நடைபெற்றது.

இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை ஊக்கப்படுத்துகின்ற வகையில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வரலாற்றில் மூன்றாவது முறையாக, ‘பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் 2025’ இன்று கொண்டாடப்பட்டது.

இப்பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள் பின்வரும் நோக்கங்களுடன் கொண்டாடப்பட்டது.

- படைப்புச் சிந்தனையை வளர்ப்பது
- மேம்பட்ட கல்வித் திறன்களைப் பெறுவது
- கற்றல், செயல்பாடு மற்றும் அறிவியல் உற்பத்தித்திறனை வளர்ப்பது
- வாய்மொழி சுயாதீன விமர்சன / எழுதப்பட்ட தொடர்பு திறன்கள் / சிந்தனை திறன்களை வளர்ப்பது
- சுகாதாரப் பராமரிப்பு தீர்வுகளை மேம்படுத்துதல் மற்றும் மருத்துவப் பயிற்சியை மேம்படுத்துதல்
- ஆசிரியர் வழிகாட்டிகளை வளப்படுத்துதல்

இவ்வாண்டு மருத்துவம், பல் மருத்தும், ஆயுஷ், செவிலியர், மருந்தியல், துணை மருத்துவம், மற்றும் மருத்துவம் சார்ந்த துணை படிப்புகளின் மாணவர்கள் அனைவரும் ஆராய்ச்சி குறிப்புகளை சமர்ப்பித்தனர். இந்த நிகழ்வு கடந்த ஆண்டை காட்டிலும் வியக்கத்தக்க வளர்ச்சியாகும்.

இவ்விழாவில் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் **மரு.கே. நாராயணசாமி**, அவர்கள் திட்ட விளக்கஉரை ஆற்றினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

### அமைச்சர் தமது தலைமை உரையில் ;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசில் மருத்துவத்துறையில் தமிழ்நாடு “இந்தியாவில் பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்து வருகிறது என்பதை பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன் என கூறினார்.

அந்த வகையில் இந்தியாவில் உள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் மிகவும் சிறந்து விளங்கும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பில் பல புதிய முன்னெடுப்புகளாக பல்கலைக்கழக ஆராய்ச்சி நாள், மருத்துவ ஆராய்ச்சிக்கான நிதி உதவியை உயர்துதல், பல்கலைக்கழக மேம்பட்ட ஆராய்ச்சி ஆய்வு இதழை வெளியிடுதல் உள்ளிட்ட பல முன்னேற்றம் தரும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதை எண்ணி இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேரா.மரு.கே.நாராயணசாமி அவர்களை பாராட்ட கடமைப் பட்டுள்ளேன் என அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முக்கிய மைல்கல்லாக பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி தின நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் பல்வேறு சுகாதார துறைகளின் மாணவர்களை இணைத்துச் செயல்பட்டது. இது பல்துறை ஆராய்ச்சியை ஊக்குவிக்கின்ற ஒரு விதமாக மட்டுமல்லாமல், இன்று சிகிச்சை முறைகளில் உள்ள பிரச்சினைகளுக்கு நவீன தீர்வுகளை கண்டுபிடிக்க வழிவகுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

### இளம் விஞ்ஞானி விருது மற்றும் போட்டிகள்!

மாணவர்களின் முக்கியமான ஆராய்ச்சி சாதனைகளை பாராட்டும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட இளம் விஞ்ஞானி விருது, தரமான ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு வழங்கப்பட்டது. விருது பெற்ற மாணவர்கள் தங்களது ஆராய்ச்சி துறையில் எதிர் காலத்தில் முன்னணி பெறுவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

மருத்துவ ஆராய்ச்சியில் மாணவர்களின் முனைப்பு, நாட்டின் மருத்துவத்தை மேம்படுத்தும் விதமாக செயற்கை நுண்ணறிவு போன்ற புதிய தொழில் நுட்பங்களை கையாளவும், இது தமிழக மருத்துவத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு புதிய திசையைக் காட்டும்

இவ்வாறு அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் பின்வரும் மருத்துவ ஆராய்ச்சி புத்தகங்களை விழா மேடையில் வெளியிட்டார்கள்.

*1) Health Research Made Simple A Step-by-Step Guide for Health Professionals*

*2) CAPTAIN ACTS AS WARRIOR TAMILNADU'S PANDEMIC LEARNINGS*

*3) Road Map for Health Care & MedTech Hackathon - From Concepts to Creation*

*4) Designing Health Research: A Comprehensive Text Book to Health Research Practice*

*5) Mastering Medical Research: Essentials of Methodology & Biostatistics*

*6) University Research Day Activities ARIVELVI 2025 - Abstract Book*

இந்நிகழ்ச்சியை முன்னிட்டு பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான போட்டிகள் பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளுக்கு நடத்தப்பட்டன. அதில் ஹாக்கத்தான், குழந்தைகள் வினாடி வினா, ஆராய்ச்சி கட்டுரை வாசிப்பு, மீம் உருவாக்கம், ஜஸ்ட் எ மினிட் (JAM), குறும்படம் ஆகியவை இடம்பெற்றன. இவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், சிறந்த ஆராய்ச்சியாளர் விருது (ஆசிரியர்களுக்கும் & மாணவர்களுக்கும்) மற்றும் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கும் சான்றிதழ்களை அமைச்சர் அவர்கள் அளித்து சிறப்பித்தார்கள்.

**புதுமை • ஒருங்கிணைப்பு • தாக்கம்** என்ற கோட்பாட்டை முன்னெடுத்து பல்கலைக்கழகம் தொடர்ந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்காக பாடுபட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் மரு.சாந்தாராமன், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மரு.கி. சிவசங்கீதா, பல்கலைக்கழகத்தின் துறைதலைவர்கள், மருத்துவக் கல்லூரியின் முதல்வர்கள் மற்றும் மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# வீரபாண்டி ஆ.இராஜா 4ஆம் ஆண்டு நினைவு நாள் - மலரஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!

சேலம்,செப். 28-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நமது நெஞ்சங்களில் நிறைந்து, வாழ்ந்த வீரபாண்டி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராகவும், தேர்தல் பணிக்குழுச் செயலாளராகவும், கழகத் தோழர்களுடன் கரம் கோர்த்து கழகம் வளர்க்க பாடுபட்ட சகோதரர் திரு. வீரபாண்டி. ஆ. இராஜா அவர்களின் நான்காம் ஆண்டு நினைவுநாள் வருகின்ற 02.10.2025 வியாழக்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் பூலாவரியில் உள்ள அவருடைய நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்களும், அவர் மீது பற்றும், பாசமும் கொண்ட பொதுமக்களும் திரளாக பங்கேற்று மறைந்த சகோதரர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்த்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடந்த 25ஆம் தேதியன்று திருச்சிராப்பள்ளி பெரியகடை வீதியில் உள்ள கோ.ஆப்டெக்ஸ் அமுதசுரபி விற்பனை நிலையத்தில் தீபாவளிக்கான விற்பனையைத் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில், மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன், கோ.ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் ஜெ.நாகராஜன், மேலாளர் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி கோபி, திருச்சி பொதிகை கோ.ஆப்டெக்ஸ் அமுதசுரபி விற்பனை நிலைய மேலாளர் பாஸ்கரன், பகுதிக் கழகச் செயலாளர் பாபு மாமன்ற உறுப்பினர் சாதிக்பாஷா, அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.